**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 07.09.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

| | |
|---|---|
| இராசிபுரம் நகராட்சி, | தனி அலுவலர், |
| நாள் : 07.09.2018 | இராசிபுரம் நகராட்சி |

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சியில் **01.04.2018** முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய இருப்பதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். **20555/18**/ஆர்**1** நாள் **20.08.2018**–இல் தெரிவிக்கப்பட்டதில் சொந்த குடியிருப்பு மற்றும் வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு **50** சதவீதம், தொழிற்சாலை கட்டிடங்களுக்கு **100** சதவீதம், மற்றும் வணிக வளாக கட்டிடங்களுக்கு **100** சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரைகளின்படி தற்சமயம் வரிவிதிப்பிலுள்ள மண்டல மதிப்பினை திருத்தம் செய்யலாம். நகராட்சிப் பகுதி, பகுதியின் உபயோகம், கட்டுமானங்களின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்கனவே உள்ள மூன்று மண்டலங்களின் மதிப்பையும் கீழ்க்ண்டவாறு உயர்வு செய்யலாம். உயர்வு செய்யப்பட்டுள்ள மண்டலங்களின் மதிப்பு விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **மண்டலம்** | **பழைய மதிப்பு** | **01.04.2018 முதல் திருத்தம் செய்யப்படும் மதிப்பு** |
|---|---|---|
| A | 1.10 | 1.65 |
| B | 0.80 | 1.20 |
| C | 0.60 | 0.90 |

**அலுவலகக் குறிப்பு :** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். **20555/18**/ஆர்**1** நாள் **20.08.2018**–இன்படி மண்டல மதிப்பை மேற்கண்டவாறு திருத்தியமைத்து அதன்படி **01.04.2018** முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும், புதிய வரிவிதிப்பினை நடைமுறைப்படுத்தவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(அ**1/1907/18**)

**தீர்மானம் எண். 404**

அனுமதிக்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலைய மேல் தளம் பழுதுபார்த்து ஓடுகள் பதித்தல் மற்றும் வி.நகர் இடுகாடு சுற்றுச்சுவர் பழுதுகள் சரிசெய்தல் பணிகளை மேற்கொள்ள `. **980000/–** மதிப்பீட்டுப் பணிக்கு **06.09.2018** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | |
|---|---|
| **1)** திரு ஆர்.மாணிக்கம், ஒப்பந்ததாரர்,<br>**6**எ, தட்டான்குட்டை ரோடு | – மதிப்பீட்டைவிட **0.02%** குறைவு. |
| **2)** திரு ஜே. ரவிசந்திரன், ஒப்பந்ததாரர்,<br>ஆர். கவுண்டம்பாளையம் | – மதிப்பீட்டைவிட **0.79%** அதிகம். |

மதிப்பீட்டைவிட 0.02% குறைவான திரு ஆர்.மாணிக்கம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவான திரு ஆர்.மாணிக்கம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/1778/18)

**தீர்மானம் எண். 405**

அனுமதிக்கப்பட்டது

(3) இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் பெண்கள் சிறுநீர் கழிப்பிடம், இருக்கை, மின் விளக்குகள், சாக்கடை மூடி அமைத்தல் பணிகளை மேற்க்கொள்ளும் `. 900000/– மதிப்பீட்டுப் பணிக்கு 06.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர்.மாணிக்கம், ஒப்பந்ததாரர்,
6எ, தட்டான்குட்டை ரோடு – மதிப்பீட்டைவிட 0.03% குறைவு.
2) திரு ஜே. ரவிசந்திரன், ஒப்பந்ததாரர்,
ஆர். கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 0.73% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.03% குறைவான திரு ஆர்.மாணிக்கம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.03% குறைவான திரு ஆர்.மாணிக்கம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/1799/18)

**தீர்மானம் எண். 406**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1 மேற்கு காலனியில் சிறுபாலம் அமைக்கும் `. 100000/– மதிப்பீட்டுப் பணிக்கு 06.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர்.மாணிக்கம், ஒப்பந்ததாரர்,
6எ, தட்டான்குட்டை ரோடு – மதிப்பீட்டைவிட 0.04% குறைவு.
2) திரு ஜே. ரவிசந்திரன், ஒப்பந்ததாரர்,
ஆர். கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 0.55% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.04% குறைவான திரு ஆர்.மாணிக்கம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.04% குறைவான திரு ஆர்.மாணிக்கம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/1780/18)

**தீர்மானம் எண். 407**

அனுமதிக்கப்பட்டது

( 5 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் வீட்டுக் கழிவு நீரினை பாதாள சாக்கடை குழாயுடன் இணைக்க வீட்டின் உட்புறத்திலிருந்து கழிவுநீர் இணைப்புகள் ஏற்படுத்தும் பணிகளுக்கு இரண்டாம் அழைப்பாக ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளேடுகளில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி தி இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினகரன் நாளேடுகளில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டதற்கான தொகை `. 321038/– ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** விளம்பரக் கட்டணம் `. 321038/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/804/18)

**தீர்மானம் எண். 408**

அனுமதிக்கப்பட்டது

( 6 ) இராசிபுரம் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் கணினி சேவை மையத்தில் பொதுமக்கள் அமர இருக்கை வசதிகள் மற்றும் மேற்கூரை அமைத்து, அலுவலக முகப்பில் புதிய இரும்பு கேட் அமைக்கவும், அலுவலக சுற்றுச்சுவற்றினை உயர்த்திக் கட்டவும், பொறியியல் பிரிவு கட்டிட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு `. 600000/– நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/2020/18)

**தீர்மானம் எண். 409**

அனுமதிக்கப்பட்டது

( 7 ) இந்நகராட்சியில் அனைத்து பிரிவிலுள்ள கணினி, UPS மற்றும் பிரிண்டர் ஆகியவற்றை ஆண்டு பராமரிப்பு 30.04.2018–ஆம் தேதியுடன் முடிவடைந்துவிட்டதாலும் இப்பணியை மேலும் ஒராண்டிற்கு செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் `.150000/–யை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/129/17)

**தீர்மானம் எண். 410**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சி குடிநீர் விநியோக சோடியம் ஹைபோ குளோரைடு திரவம் ஏற்றும் மின் விசைப் பம்புகள் பழுதுகள் சரிசெய்யும் `. 140000/– மதிப்பீட்டுப் பணிக்கு 06.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) ஸ்ரீ பாலாஜி அன்ட் கம்பெனி, சேலம் – `. 138591/–
2) ஸ்ரீ ராஜகணபதி கெமிக்கல்ஸ், சேலம் – `. 141500/–

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள ஸ்ரீ பாலாஜி அன்ட் கம்பெனி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள ஸ்ரீ பாலாஜி அன்ட் கம்பெனி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ2/1829/18)

**தீர்மானம் எண். 411**

அனுமதிக்கப்பட்டது

(9) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1 முதல் 13 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் பகிர்மான மற்றும் பிரதான குழாய்கள், சுலீஸ் வால்வுகளில் 2018–19–இல் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் `. 500000/– மதிப்பீட்டுப் பணிக்கு 06.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர்,
27, வி. நகர் ரோடு எண். 17 – மதிப்பீட்டைவிட 0.28% குறைவு.
2) திரு ஜே. ரவிசந்திரன், ஒப்பந்ததாரர்,
ஆர். கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 3.18% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.28% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.28% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(இ2/1862/18)

**தீர்மானம் எண். 412**

அனுமதிக்கப்பட்டது

(10) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 14 முதல் 27 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் பகிர்மான மற்றும் பிரதான குழாய்கள், சுலீஸ் வால்வுகளில் 2018–19–இல் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் `. 500000/– மதிப்பீட்டுப் பணிக்கு 06.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

/5/

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர்,

27, வி. நகர் ரோடு எண். 17 – மதிப்பீட்டைவிட 0.01% குறைவு.

2) திரு ஜே. ரவிசந்திரன், ஒப்பந்ததாரர்,
ஆர். கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 3.76% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.01% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(இ2/1828/18)

**தீர்மானம் எண். 413**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– ரா. மகேஸ்வரி,
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.